**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 56/2023**

Deposition of witness for **PW1** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Satheesh | Father Name | : Anbalazan |
| Village | : | Age | : |

**நாள்:07.01.2025.**

**மனுதாரர் முதல் விசாரணை :**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர், ம.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன்.

முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் **Ex.P**1 ஆகவும்,

Insurance Policy of the Indigo GLS Car ஜெராக்ஸ் நகல் **Ex.P**2 ஆகவும்,

Driving License of the driver of the 1st respondent ஜெராக்ஸ் நகல் **Ex.P**3 ஆகவும்,

Aadhar card of he petitioner ஜெராக்ஸ் நகல் **Ex.P**4 ஆகவும்,

Driving License of the petitioner ஜெராக்ஸ் நகல் **Ex.P**5 ஆகவும்,

குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஓட்டி சென்ற இருசக்கரவாகனம் சதீஸ் என்ற எனது நண்பருக்கு சொந்தமானது.

நன் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு உள்ளது.

அந்த காப்பீடு நிறுவனத்தை வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

எதிரி மீது தவறு இருந்ததால் அவரது காப்பிடு நிறுவத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

நாங்கள் 3 பேர் அந்த இரு சக்கரவாகனத்தில் சென்றோம் அது violation of policy என்றால் சரிதான்.

நான் ஓட்டி சென்ற வாகனம் காரின் வலது புறத்தில் தான் மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

நாங்கள் 3 பேர் Triples சென்ற போது விபத்து ஏறப்பட்டால் violation of policy என்பதால் எங்கள் காப்பீடு கழகம் நஷ்டஈடு வழங்கத் தேவையில்லை என்று சென்னால் சரியல்ல.

நான் விபத்தின் போது டாட்டா நிறுவனத்தில் ரூ.25000 வருமானத்தில் தான் வேலை செய்தேன் என்று சொல்லியிருந்த போதும் அதற்கு போதுமான ஆதாரங்கள் எனது மனுவோடு நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் எனது வருமானத்தை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு இந்த விபத்தால் எதிர்கால மருத்துவ செலவு ஏற்படும் என்பதை நிரூபிக்கும் வண்னம் எனது வேலை திறன் வருங்காலங்கில் பாதிக்கும் என்பதோ எனக்கு நிறந்த ஊனம் ஏற்பட்டது என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.

நான் கோரிய தொகை எனக்கு சட்டப்படி கிடைக்க தக்கதல்ல என்று சொன்னாலும் எனது வழக்கு சட்டப்படி நிலைக்க தக்கதல்ல என்று சொன்னாலும் சரியல்ல.

என்மீது மோதிய வாகன்தை ஓட்டிய நபருக்கு வாகனத்தை ஓட்டுநர் உரிம பேட்ஜ் இல்லை என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

ஓம்./–திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.